செ.வெ.எண்: 01 நாள்: 01.11.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.81.69 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.11.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கவிநாடு மேற்கு ஊராட்சி, அத்திரிப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கிராம சேவை மைய கட்டிட கட்டுமான பணியையும், அகரப்பட்டி சாலையின் இருபுறமும் ரூ.10,78,200/- மதிப்பீட்டில் நடப்பட்டு வரும் மரக்கன்றுகள் பணியையும், 9ஏ நத்தம்பண்ணை ஊராட்சி, கட்டியாவயலில் தனிநபர் இல்லக்கழிப்பறை கட்டும் திட்டத்தின் கீழ் தலா ரூ.12000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட 4 கழிவறைகள் கட்டுமானப்பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் வடவாளம் ஊராட்சி, நெப்பியப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி கட்டுமானப்பணியையும், எம்.குளவாய்ப்பட்டி ஊராட்சி, ராமச்சந்திரகுளத்தில் ரூ.27,33,000 மதிப்பீட்டில் நடப்பட்டுள்ள மரம் நடுதல் பணியையும், மணவிடுதி ஊராட்சி, மணவிடுதியில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கிராம சேவை மைய கட்டிட கட்டுமான பணியையும், கம்மங்காடு மேலப்பட்டியில் முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பசுமை வீட்டின் கட்டுமான பணியையும் என மொத்தம் ரூ.81,69,200/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது தனிநபர் இல்லக்கழிவறைகளை அனைவரும் முறையாக பயன்படுத்தவும், குளங்கள் மற்றும் சாலையோரங்களில் மரக்கன்றுகளை முறையாக நட்டு வளர்த்து தினமும் உரிய முறையில் நீர் ஊற்றி பராமரிக்கவும், கிராமப்பகுதிகளில் உள்ள வேலிக்கருவை மரங்களை முழுவதுமாக அகற்றவும், பசுமை வீடு மற்றும் கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடங்களில் மின்சாதனங்கள் பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை விரைவாக முடிக்கவும், குளத்தில் உள்ள பழுதடைந்த பாலத்தை உடனடியாக சரிசெய்யவும், மேலும் முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நெப்பியப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உள்ள மாணவ, மாணவிகளின் கல்வித்தரம் மற்றும் எம்.குளவாய்ப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்தில் மாணவ, மாணவிகளுக்கு சமைக்கப்பட்ட சத்துணவினை சாப்பிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**